மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

அ.வ.எண்.	: 4/2023	வா.சா.	: 1
பெயர்	: செல்வம்	த/பெ.	: முத்தையா
தாலுகா	: நத்தம்	கிராமம்	: பள்ளபட்டி
தேதி	: 25.03.2026	வயது	: 53/2026

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

11) நான் கட்டிய வீடு ஆனது ஓட்டுவீடு ஆகும். எனது அப்பாவிற்கு கிடைத்த பங்கு வீடு முழுவதும் ஓடு பதிக்கப்பட்டு இருந்தது. எனது அப்பா வீட்டிற்கு கிழக்கு பக்கம் சித்தப்பா பாக வீடு இருந்தது. அதுவும் ஓட்டு வீடுதான். எனது வீடு ஆனது வடக்கு வாசல் பார்த்த வீடு. எனது சித்தப்பா வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் ஒரே வாசல் படி உள்ளது. நான் சொல்வது போல் வீட்டு அமைப்பு கிடையாது என்றாலும் எனது சித்தப்பா சின்னனன் வீடு ஆனது தெற்கு பக்கம் தெற்கு பார்த்த வாசலாக தனியாக உள்ளது என்றால் சரியல்ல. அதேபோல் வீடு ஆனது ஒரு பகுதி R.C.C.காரை வீடாகவும், தாழ்வாரம் மட்டும் ஓடு பதிக்கப்பட்டு இருந்தது என்றால் சரியல்ல.

12) எனது தகப்பனார் அந்த வீட்டை எனக்கு பாகம் கொடுத்ததால் வீடு கட்டுவதற்கு நான் 1ம் பிரதிவாதியிடம் அனுமதி கேட்டேனா என்றால் இல்லை. வீடு கட்டியது தொடர்பாக 1ம் பிரதிவாதி கேட்டபோது எங்களுக்குள் வாக்குவாதம் ஆகி நானும், எனது பிள்ளைகளும் சேர்ந்து 1ம் பிரதிவாதியை கீழே தள்ளி விட்டோம் என்றால் சரியல்ல. வயதானவர் என்பதால் கீழே விழுந்ததில் அவருக்கு மார்பில் அடிபட்டதால் அவருக்கு மூச்சு விட சிரமப்பட்டு அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்றால் பொய். மூன்று நாட்கள் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் 1ம் பிரதிவாதி

சிகிச்சையில் இருந்தார் என்றால் அது பொய். அவர் சிகிச்சையில் இருந்த போது நத்தம் காவல் நிலையத்தில் இருந்து வந்த போலீசார் விசாரித்து புகார் கொடுக்கப்பட்டு கு.எண்.75/2023 வழக்கு எனது மீதும், எனது பிள்ளைகள் மீதும் உள்ளது என்றால் சரிதான், அது பொய்யான வழக்கு. அவர் மீதும் நாங்கள் புகார் கொடுத்துள்ளோம்.

13) 1ம் பிரதிவாதி கொடுத்த புகார் ஆனது 19.01.2023ம் தேதி என்றாலும் அதற்கு பிறகு தான் 24.01.2023ஆம் தேதி நான் இந்த தாவா அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1995 ஆம் வருடம் வழக்கு சொத்தை எனது தந்தை எனக்கு பாகம் கொடுத்ததாக சொல்லும் நிலையில் அவர் இறந்த 2004 வருடம் வரையிலான காலகட்டத்திற்கு வீட்டிற்கான சொத்து வரி தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்த ஒரு ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக தாக்கல் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது தந்தை ஒன்றாம் பிரதிவாதிக்கு கம்பத்தில் வீடு கட்டிக் கொடுத்தார் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

14) வழக்கு சொத்திற்கான பட்டா எனது அப்பா பெயரில் இருந்தது. பட்டா எனது பெயருக்கு எப்போது மாற்றப்பட்டது என்றால் 2000ம் வருடத்தில் மாற்றப்பட்டது. 2000ம் வருடத்தில் எனது பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி காலகட்டத்தில் பட்டா எனது பெயரில் மாற்றவில்லை என்றாலும் வழக்கிற்காக 2000ம் வருடத்திலேயே மாற்றப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 2020 ஆம் வருடம் தான் எனது குடும்ப உறுப்பினர்களின் எவ்வித அனுமதியும் பெறாமல் தன்னிச்சையாக எனது பெயரில் பட்டா மாற்றம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வங்கியில் கடன் பெற்று வீடு கட்டினேன்

என்று சொல்லும் நிலையில் அதற்கான வங்கி கடன் குறித்த ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

15) பிராது பக்கம் 4ல் வழக்குமூலத்தில் தாவா சொத்தினை 1ம் வாதி தனது தந்தை மூலம் வாய்க்கரால் கிரையம் பெற்று அனுபவித்து வந்த நாள் முதலும் என்று தெரிவித்துள்ளேன் என்றால் கிரையம் இல்லை பங்கு தான் கொடுத்தார். அதனால் கிரையம் என்று நான் சொல்வது தவறு என்றால் சரிதான். பிராது வழக்கு சொத்து ஆனது நான்குமால்கள் சீர்திருத்தம் செய்யப்பட்ட பிறகும் தவறான சொத்து விபரம் காட்டப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து தற்போது வரை பாகம் பிரிக்கப்படாமல் கூட்டுக் குடும்ப சொத்தாக இருப்பதால்தான் 1ம் பிரதிவாதி என் மீதும், எனது சகோதரிகள் மீதும் அ.வ.எண்.42/2023 என்ற வழக்கை பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால் தவறானது.

16) நான் சொல்வது போல் எனது தந்தை முப்பது வருடங்களுக்கு முன்பே வழக்கு சொத்தை பாகப்பிரிவினை செய்து கொடுத்ததாக சொல்வது தவறு என்றாலும் தற்போது வரை அந்த சொத்து கூட்டு குடும்ப சொத்தாக தான் உள்ளது என்றாலும் அதனால் நான் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர முடியாது என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதியும், அவரது பிள்ளைகளும் குடியிருந்து வரும் வீடானது 2ம் பிரதிவாதி வெளிநாட்டிலிருந்து வேலைபார்த்து சம்பாதித்து கிடைத்த வருமானத்தையும், திவான் ஹவுசிங் பைனான்ஸ் நிறுவனத்தில் காலிமனையிடம் கிரையமாக பெற்று பேங்க் ஆப் பரோடா வங்கியில் கடன் வாங்கி வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து ஆனது எனது தகப்பனாரின் பாட்டனார் காலத்தில் இருந்து தற்போது வரை எனது சகோதர சகோதரிகளுடன் கூட்டுக் குடும்ப சொத்தாக உள்ள நிலையில் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் சட்டப்படி கோர இயலாது என்றால் சரியல்ல.

17) வழக்கு சொத்து ஆனது பொது குடும்ப சொத்தாக உள்ள நிலையில் அது குறித்து நான் எனது மனைவிக்கு 25.05.2022ம் தேதி தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதித்தர இயலாது என்பதால் தான் மேற்படி ஆவணத்தை ரத்து செய்யக்கோரி அ.வ.எண். 42/2023 வழக்கில் பரிகாரம் கோரியுள்ளார் என்றால் தவறானது. என்னுடைய சித்தப்பா சின்னனன் என்பவருக்கு பாத்தியப்பட்ட வீட்டை நான் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரிதான், எனது சித்தப்பாவின் வாரிசுகள் அந்த வீட்டை எனக்கு எழுதி கொடுத்துவிட்டார்கள். மேற்படி வீடு எழுதிக் கொடுத்தது பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் வாயிலாகவா என்றால் இல்லை. பதிவுராத ஆவணத்தில் எழுதிக் கொடுத்துள்ளார்கள். நான் சொல்வது போல் எனது சித்தப்பா வாரிசுதாரர்கள் யாரும் மேற்படி சொத்தை எழுதிக் கொடுக்கவில்லை என்றாலும், நான் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்து அந்த இடத்தில் கட்டுமான பணிகள் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

18) வழக்கு சொத்தானது எனது சித்தப்பா வீடு இருந்த பகுதியையும் சேர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது சித்தப்பா சொத்தை காலி இடமாக வைத்துள்ளேன். நீதிமன்ற ஆணையர் அந்த இடத்தை பார்த்தால் சித்தப்பா இடம் காலியாக உள்ளதா இல்லையா என்பது தெரியவரும் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் வாயிலாக நில அளவையர் மற்றும் சர்வேயர் மூலம் அளவீடு செய்ய நான் தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். எவ்வித பதிவு ஆவணமும் இன்றி எனது சித்தப்பா இடத்தையும் சேர்த்து வீடு கட்டி உள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் நான் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரம் மற்றும் வழக்கு சொத்து விபரம் தவறானது என்றாலும் அதனால் நான் கோரும் பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. நான் இந்த வழக்கை தாக்கல் செய்ய சமச்சீர் நிலையும் இல்லை முதல்நிலை நோக்கு

வழக்கும் இல்லை என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 25.03.2026 கையெழுத்து செய்துள்ளார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.25 15:06:22 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.